**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.**

**அ.வ.எண்.14/2025**

2026–ம் வருடம் ஏப்ரல் திங்கள் 15–ம் நாளன்று பிரதிவாதி தரப்பு சாட்சியாக பி.வா.சா.1–வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.ராமகிருஷ்ணன், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்.** | : | **குணசேகர்** | **தொழில்** | : | |
| **த/பெ.** | : | | **வட்டம்** | : | |
| **முகவரி** | : | | **மதம்** | : | |
| **ஜாதி** | : | | **வயது** | : | |

**முதல் விசாரணை:–**

நான் இவ்வழக்கில் பிரதிவாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். கடந்த 07.02.2025 தேதியிட்ட புகார்மனு அலுவலக நகல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 11.02.2025 தேதியிட்ட இணையவழி புகார் மனு அலுவலக நகல் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 11.02.2025 தேதியிட்ட புகார் மனுவிற்கான இணையவழி ரசீது இணையவழி தரவிறக்க நகல் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 11.02.2025 தேதியிட்ட புகார் மனுவின் நிலை குறித்த விவரம் இணையவழி தரவிறக்க நகல் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரதிவாதியின் ஆதார் அடையாள அட்டை நகல் பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதியின் ஆதார் அடையாள அட்டை நகல் பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரதிவாதியின் குடும்ப அட்டை நகல் பி.வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 26.01.2023 தேதியிட்ட கரூர், கோவை ரோடு, ஆல்வின் நகர், எண்.163, A.E.–ல் உள்ள அப்போலா லோகா மருத்துவமனையில் I.P.No.KRRHIP29632–ல் வழங்கப்பட்ட மருத்துவமனை விடுவிப்பு அறிக்கை அசல் பி.வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 26.01.2023 தேதியிட்ட கரூர், கோவை ரோடு, ஆல்வின் நகர், எண்.163, A.E.–ல் உள்ள அப்போலா லோகா மருத்துவமனையின் IP.No.KRRHIP29632–ல் மருத்துவ சிகிச்சை கட்டணம் செலுத்தியதற்கான ரசீது பி.வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.04.15 17:54:06 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.